பெயர்: .......................... தேதி: ..........................

# விடைக்கேற்ற வினாவைத் தேர்வு செய்.

பகுதி_1

**சான்று:-** ஆமாம்! எனக்குப் பாட்டு பாடத் தெரியும்.

- ☐ உனக்கு எத்தனை பாட்டு பாடத் தெரியும்?
- ☑ உனக்குப் பாட்டு பாடத் தெரியுமா?
- ☐ உனக்குப் பாப்பா பாடல் பாடத் தெரியுமா?

1. என் பெயர் அமுதா.
   - ☐ உன் பெயர் என்ன?
   - ☐ உன் பெயர் எது ?
   - ☐ உன் பெயர் எத்தனை?
2. பாகற்காய் கசப்புச் சுவை உடையது.
   - ☐ பாகற்காய் பச்சை நிறமா?
   - ☐ பாகற்காய் எந்தச் சுவை உடையது?
   - ☐ பாகற்காய் எவ்வளவு சுவையுடையது?
3. நான் இந்திய நாட்டில் வசிக்கின்றேன்.
   - ☐ நீ எந்த நாட்டில் வசிக்கின்றாய்?
   - ☐ நீ அமெரிக்காவில் வசிக்கின்றாயா?
   - ☐ நீ எங்கு வசிக்கின்றாய்?
4. எனது மூத்த சகோதரியை அக்கா என்று அழைப்பேன்.
   - ☐ உனது மூத்த சகோதரியை தங்கை என்று அழைப்பாயா?
   - ☐ உனது மூத்த சகோதரியை எப்படி அழைப்பாய்?
   - ☐ உனது மூத்த சகோதரியை ஏன் அழைப்பாய்?

பெயர்: .......................... தேதி: ..........................

# விடைக்கேற்ற வினாவைத் தேர்வு செய்.

1. ஆமாம்! நான் தாலாட்டுப்பாடலைக் கேட்டு இருக்கின்றேன்.

- ☐ தாலாட்டுப்பாடல் உனக்குப் பிடிக்குமா?
- ☐ தாலாட்டுப்பாடல் எதற்காகப் பாடுவர்?
- ☐ தாலாட்டுப்பாடலை நீ கேட்டு இருக்கின்றாயா?

2. எனது எடை 30 கிலோகிராம்.

- ☐ உனது எடை எப்படி?
- ☐ உனது எடை எவ்வளவு?
- ☐ உனது எடை எத்தனை?

3. என் பாட்டி இந்தியாவில் வசிக்கின்றார்கள்.

- ☐ உனது பாட்டி வசிப்பது அமெரிக்காவா?
- ☐ உன் பாட்டி எங்கே வசிக்கின்றார்கள்?
- ☐ உனது பாட்டி கதை கூறுவார்களா?

4. நான் விரும்பி உண்ணும் காய்கறி கேரட்.

- ☐ நீ விரும்பி உண்ணும் காய்கறி எது?
- ☐ நீ விரும்பி உண்ணும் காய்கறி எத்தனை?
- ☐ நீ கேரட் உண்பாயா?

5. என் வீட்டில் வளர்க்கும் நாயின் பெயர் ராமு.

- ☐ உனது வீட்டில் எந்த நாய் வளர்க்கின்றாய்?
- ☐ உனது வீட்டில் வளர்க்கும் விலங்கு எது?
- ☐ உன் வீட்டில் வளர்க்கும் நாயின் பெயர் என்ன?